# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,

# DINDIGUL.

**S**.**C**.60/2024

**Prosecution Witness** : 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. சரவணன் | **Caste** | : | |
| **Father's Name** | : | திரு. மொக்கய தேவர் | **Calling** | : | |
| **Village** | : | அம்மாபட்டி, மாங்கரை. | **Religion** | : | இந்து |
| **Taluk** | : | திண்டுக்கல் | **Age** | : | 33 |
| | | | **Dated** | : | 19.06.2024 |

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது

---

**Accused present**. **Both side counsels present**.

பட்டியல் சாட்சி 2 திரு. சரவணன் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 2 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து சென்டிரிங் வேலை செய்து வருகிறேன். அசா.1 மற்றும் ஆஜர் எதிரியை தெரியும். 06.08.2023ம் தேதி அன்று காலை 08.00 மணிக்கு எனக்கு உடல்நிலை சரியில்லாததால் புகழ்நாதனுடன், ராம் குமார் என்பவரின் இருசக்கர வாகனத்தில் மேரி மருத்துவமனைக்கு சென்றேன். ஊசி போட்டு விட்டு சுமார் காலை 10.30 மணிக்கு வீட்டிற்கு வந்தேன். வீட்டிற்கு வந்து என்னை

இறக்கி விட்டு விட்டு போய்விட்டு வருகிறேன் என சொல்லி சென்றார். அப்பொழுது ஆஜர் எதிரி ராஜா, புகழ்நாதனை பார்த்து ஏன்டா தேவிடியா பயலே அவனை ஆஸ்பத்திரிக்கு கூப்பிட்டு சென்றாயா எனக் கேட்டு கீழே தள்ளி விட்டு கைகளால் நெஞ்சில் குத்தியும், தலையிலும் அடித்தார். புகழ்நாதனின் காப்பாத்துங்க என்ற சத்தம் கேட்டு அருகில் இருந்த கிருஷ்ணன் மகன் செல்வக்குமார் மற்றும் ஜெயராணி மற்றும் சிலர் ஓடி வந்து சண்டையை விலக்கி விட்டனர். செல்வக்குமார், புகழ்நாதனை அவர் வீட்டிற்கு அழைத்து சென்றார். அங்கிருந்து அவரை செந்தில் குமார், கிருஷ்ணன், முத்து லெட்சுமி ஆகியோர்கள் மேரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு புகழ்நாதனின் பல்ஸ் குறைவாக இருந்ததால், திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். அங்கு புகழ்நாதனை பரிசோதித்த மருத்துவர்கள் ஏற்கனவே அவர் இறந்து விட்டதாக கூறினார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர். 09.08.2023ம் தேதி அன்று ஆத்தூர் நீதிமன்றத்தில் நீதிபதி அவர்களின் முன்பு வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது **Ex.P**3 ஆகும்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-

எதிரி தரப்பில் இந்த வழக்கை பொறுத்து பட்டியல் சாட்சி 1 முதல் 4 வரை உள்ளவர்களில் 2, 3, 4 சாட்சிகள் நேரடி சாட்சிகள் என்பதால் மேற்கண்ட நான்கு பேரையும் ஒரே நாளில் குறுக்கு விசாரணை செய்வதற்கு ஏதுவாக குறுக்கு விசாரணை ஒத்தி வைக்க மனு தாக்கல் செய்யப்பட்டு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

R KANAGARAJ
Digitally signed by R KANAGARAJ
Date: 2024.06.19 16:20:54 +0530